[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 மே 7

தங்கும் விடுதிகள், பணிபுரிபவர்களுக்கான குடியிருப்புகள், நவீன உணவுக் கூடம், மருத்துவ மையம், விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்ட பயிற்சி நிலையமாக பவானிசாகர் அரசு பயிற்சி நிலையம் மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–00

(ஆ) காவிரி கடைமடை மதகுகள், தொடர்புடைய கட்டமைப்புகளை மறு கட்டுமானம் செய்தல் மற்றும் கூடுதல் மதகுகளை அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வுலகம் இனிதே இயங்க மழைநீர் இன்றியமையாததாக விளங்குகிறது. எனவேதான் "மாமழை போற்றுதும்; மாமழை போற்றுதும்" என இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறியுள்ளார். நீரின் அவசியத்தைக் கருதி, எனது தலைமையிலான அரசு, மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்தி வருகிறது.

தற்போது, பருவநிலை மாறுதல்களினால் கடல்நீர் மட்டம் உயரும் எனவும், அதன் விளைவாக பாதிப்புகள் ஏற்படும் எனவும் அண்மைக்காலமாக உலகளவில் பல வல்லுநர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். இந்தப் பருவநிலை மாறுதல்களின் விளைவாக, இன்னும் 40 ஆண்டுகளில் காவிரி டெல்டா கடலோர மாவட்டங்களில் கடல்நீர் மட்டம் உயரும்போது, அப்பகுதிகளில் உப்புநீர் உட்புகுந்து செழிப்பான விளைநிலங்கள் பாதிப்படையும்; அல்லது ஒருசில பகுதிகளில் பாசனம் அறவே பாதிப்புக்கு உள்ளாகக் கூடும் என்றும், நிலத்தடி நீரின் தன்மையும் மாறுபட்டு நீரின் உவர்ப்புத் தன்மை அதிகரித்து எதற்கும் பயன்படுத்தப்பட முடியாத நிலை ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன என்றும், மேலும், கடைமடைப் பகுதிகளில் உள்ள வடிகால்களின் வழியாகவும் கடல்நீர் உட்புகுந்து பருவமழைக் காலங்களில் வெள்ளநீர் வடிவதைத் தடுப்பதோடு மட்டுமின்றி விளைநிலங்களில் தேங்கி விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டு விவசாயிகளின்

2012 மே 7] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பொருளாதார நிலை பெருமளவில் பாதிப்படையும் என்றும் கூறப்படுகிறது. எனவே, இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் ஆகும்.

காவிரி டெல்டா மாவட்டப் பகுதிகளில் கடலிலிருந்து உட்பகுதியில் சுமார் 25 கிலோ மீட்டர் தொலைதூரம் வரையிலுள்ள பகுதிகள் ஏறக்குறைய சம மட்டப் பகுதிகளாக அமைந்துள்ளதால், வட கிழக்குப் பருவமழைக் காலங்களில் சில நாட்களில் பெய்யும் அதிகப்படியான மழை நீரால் வடிகால்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. மழைக்கால நீரைத் தேக்கி வைப்பதற்கான போதிய வசதியின்மை காரணமாக, வெள்ளநீர் கடலுக்குள் வீணாகச் சென்று கலக்கும் நிலையும் ஏற்படுகிறது. மழைக் காலத்தில் அதிகப்படியாகக் கிடைக்கும் வெள்ளநீரை, மழை இல்லாத காலங்களில் குறிப்பாக, கோடைக் காலங்களில் பெருமளவில் பயன்படுத்த இயலாத நிலையும் உள்ளது. எனவே, காவிரி டெல்டா மாவட்டங்களில் கிடைக்கக்கூடிய வெள்ளநீரைத் தேக்கி வைத்துத் தேவைப்படும் காலங்களில் பாசனத்திற்காகப் பயன்படுத்துவதும், உப்புநீர் உட்புகுதலைத் தடுப்பதும் மிகவும் அத்தியாவசியமாகிறது.

இந்தச் சூழ்நிலையில், மேற்கண்ட பாதிப்புகளிலிருந்து விடுபட வழிவகை செய்யும்பொருட்டும், பருவநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய தாக்கங்களைப் பெருமளவு எதிர்கொள்ளும் வகையிலும், காவிரி டெல்டா பகுதிகளில் ஏற்கெனவே உள்ள பழமையான கடைமடை மதகுகள் மற்றும் அதன் தொடர்புடைய கட்டமைப்புகளை மறுகட்டுமானம் செய்தல், காவிரி கடைமடைப் பகுதிகளில் மேலும் மதகுகள் அமைத்து வெள்ளநீரைத் தேக்கி வைத்து பாசனத்திற்காகப் பயன்படுத்துதல், இதன்மூலம் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு கிணறுகளின் நீர் மட்டத்தை உயர்த்த வழிவகை செய்தல், கடல்நீர் உட்புகுதலைத் தவிர்த்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டம் 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கி 1,092 கோடி ரூபாய் கடனுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. திட்ட மதிப்பீட்டில் மீதமுள்ள தொகையான 468 கோடி ரூபாயைத் தமிழக அரசு வழங்கும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 மே 7

இத்திட்டத்தின்மூலம் திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள காவிரி, வெண்ணாறு, கல்லணை கால்வாய்ப் பாசன அமைப்புகளில் ஒரு பகுதியைச் சார்ந்த சுமார் 4.50 இலட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்கண்ட பணிகளால் மாநிலத்தின் நெற்களஞ்சியமான காவிரி டெல்டா பகுதியின் வடிகால் வசதிகள் மேம்படுத்தப்படுவதோடு கடல்நீர் உட்புகுதல் தடுக்கப்படும். இத்திட்டம் முன்னுரிமை அடிப்படையில் விரைவில் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. பவானிசாகர் குடியுரிமைப் பயிற்சி நிலையத்தை நவீன வசதிகள் கொண்டதாக மாற்றியமைத்தல் மற்றும் காவிரி கடைமடை மதகுகள், தொடர்புடைய கட்டமைப்புகளை மறு கட்டுமானம் செய்தல் மற்றும் கூடுதல் மதகுகளை அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி.

முற்பகல் 11—0.5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளும் நாளும் நலத் திட்டங்களை அறிவித்து வருகின்ற போற்றுதலுக்குரிய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு விதி 110—ன்கீழ் இருபெரும் திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள்.

கற்கண்டை மட்டும் தந்தால் போதாது என்று கற்கண்டோடு சேர்த்து தேன்பாகையும் தந்ததைப்போல, இரண்டு நலத் திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிகாரம் என்பது, அதைச் செலுத்துவதிலே சிறப்புப் பெறுகிறது; ஆட்சி என்பது, அதைச் செயல்படுத்துதிலே சிறப்புப் பெறுகிறது.